DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE
C.C. No. 112/2015

**P.W.15– திரு.ரமேஷ், த/பெ.பழனிச்சாமி**

2 ம் எதிரி ஆஜர். (3,4,5 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 16.04.2026

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும் நாட்ராயன் என்பவர் எனது விசாரணையிலும் ஊமா ரெட்டியூரைச் சேர்ந்த தனது உறவினரான விஜய் என்பவரிடம் அவரது நண்பரான மதுரையை சேர்ந்த கண்ணன் என்பவரிடம் ATM கார்டை கொடுத்தால் பணம் தருவார் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதுரையை சேர்ந்த கண்ணன் என்பவரை நான் விசாரித்தேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. மேற்படி கண்ணன் என்பவர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் சேர்க்கப்படவில்லை என்றாலும் அவர் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். 2 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும் நாட்ராயன் என்பவர் எனது விசாரணையிலும் 00966551274723 என்ற நம்பரில் இருந்து அழைத்து சவுதியிலிருந்து மொய்தீன் என்பவர் பேசுவதாக சொல்லி கண்ணன் போலீசில் மாட்டிக்கொண்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மொய்தீன் என்பவரை பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி மொய்தீன் என்பவர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் சேர்க்கப்படவில்லை என்றாலும் அவர் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். அ.சா.1 அளித்த புகாரில் எந்த தேதியில் புகார் அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அரசு தரப்பு சாட்சிகளான பிரகாஷ், மணிகண்டன், ராஜசேகர், கனகராஜ், இளவரசன், மதன் ஆகியோர் வாக்குமூலங்களின் விசாரணை செய்த தேதி எழுதப்பட்டு பின்பு திருத்தம் செய்யப்பட்டு பேனாவால் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்கு எதிரிகளையும் செங்கோட்டையா திருமண மண்டபம் அருகில் வைத்து தான் கைது செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிகளை கைது செய்த இடத்தில் வைத்து கணினியின் மூலம் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன் என்றால் சரிதான். எனது லேப்டாப்பில் தான் ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்தேன் என்றால் சரிதான். அது எனது சொந்த லேப்டாப் ஆகும். எனது சொந்த லேப்டாப்பில் ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்வதற்கு மேலதிகாரியிடம் அனுமதி

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.16 18:07:52 +0530

வாங்கவில்லை என்றால் ஆமாம். எனது லேப்டாப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 2 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும் நாட்ராயன் என்பவர் எனது விசாரணையிலும் மூலப்பாளையத்தில் வீடு வாடகைக்கு எடுத்து நானும் ராம்கி சதீஷ்குமார் மற்றும் அவரது நண்பரான அலாவுதீன் ஆகியோர் தங்கி இந்த வேலையை செய்து வந்தார்கள் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டை நான் சோதனை செய்யவில்லை என்றால் சரிதான். 2 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும் நாட்ராயன் என்பவர் எனது விசாரணையிலும் சவுதிக்காரர் சொன்ன அக்கவுண்டில் இருந்து ரூ.4,44,900/- எடுத்து வைத்திருந்தோம் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி வங்கிக் கணக்கின் விபரங்களையோ அல்லது வங்கி ஸ்டேட்மெண்டையோ நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். சவுதிக்காரர் சொன்ன அக்கவுண்டில் இருந்து கைப்பற்றப்பட்ட ரூ.4,44,900/- போக வேறு எந்த ஒரு தொகையையும் எதிரிகளிடம் இருந்து நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான்கு எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ATM கார்டுகள், பாஸ் புக்குகள் தொடர்பான வங்கிக் கணக்கு விபரம் மற்றும் ஸ்டேட்மெண்டு ஆகியவற்றை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட ATM கார்டுகளில் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கில் இருந்து எதிரிகள் எந்த தொகையையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் கிரிசங்கர் மற்றும் அரசு தரப்பு சாட்சிகளின் வங்கிக் கணக்கில் இருந்து எதிரிகள் பணத்தை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. செங்கோட்டையார் கல்யாண மண்டபம் அமைந்துள்ள ஈரோடு - பூந்துறை சாலையானது மாநில நெடுஞ்சாலை என்றாலும் அது ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்டது என்றாலும் சரிதான். அந்த மண்டபத்தை சுற்றி அருகில் வர்த்தக நிறுவனங்கள் உள்ளது என்றாலும் அங்கு மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றாலும் சரிதான். நான் மாலை 4 மணிக்கு தொடங்கி இரவு 10.30 மணி வரையில் நான்கு எதிரிகளையும் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலமும் கைப்பற்றுதல் மகஜரும் தயார் செய்தேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் பொது மக்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். செங்கோட்டையார் மண்டபத்தின் அருகில் வைத்து எதிரிகளை கைது செய்ததற்கு ஆதரவாக அங்கிருந்த சிசி டிவி கேமரா பதிவை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதி, நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மாநில அரசுக்கு குற்ற வழக்கு எண்ணிக்கையை அதிகரித்து காட்டுவதற்காக பொய்யாக எதிரிகளின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பவானி, சிங்கம்பேட்டை, கதவு.எண்.1/75 ல் குடியிருக்கும் 4 ம் எதிரியின் வீட்டிற்கு சென்று அவரது அம்மா சம்பூர்ணம் என்பவரிடம் இந்த வழக்கு போடாமல் இருக்க மற்ற மூன்று எதிரிகள் வீட்டிலிருந்து அவர்கள் சேமித்த பணத்தை கொடுத்துவிட்டார்கள் என்றும் 4-ம் எதிரியை விடுவிக்க ரூபாய் 2 லட்சம் கொடுக்க வேண்டும் என்றும் இல்லை என்றால் வழக்கு பதிவு செய்யப்படும் என்று சொன்னதால் 4-ம் எதிரியின் அம்மா தன்னிடம் வைத்திருந்த சேமிப்பு பணமான ரூ.1,24,000/- கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அந்த ரூ.1,24,000/- தொகை தான் கைப்பற்றுதல் மகஜரில்

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.16 18:08:14 +0530

காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கைப்பற்றிய தொகை ரூ.4,44,900/- நான்கு எதிரிகளின் பெற்றோர்களிடம் இருந்து பெறப்பட்ட சேமிப்பு தொகை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.16 18:08:19 +0530

Judicial Magistrate No.I,
Erode.